**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 83 of 2026**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திருமதி. ஆசியா | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.22.07.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 1122 தலைமை காவலர் தமிழரசி என்பவருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராஜா என்கிற மீசை ராஜா த/பெ. ஆறுமுகம், பெரியார் நகர், மேலவாளாடி, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 07.20 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை காலை 07.40 மணியளவில் கைப்பற்றுதல்

மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், 1122 தலைமை காவலர் தமிழரசி என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.00 மணியளவில் 55 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். பின்பு எதிரியுடன் காலை 08.45 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 5/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த அழித்தல் மகஜரில் நானும், 1122 தலைமை காவலர் தமிழரசி என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2/அ.சா.1** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3/அ.சா.1** ஆகும். அந்த அழித்தல் மகஜர் **அ.சா.ஆ.4/அ.சா.1** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான் சிறப்பு உதவி ஆய்வாளருடன் எந்த வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றேன் என்றால் போலீஸ் காரில் சென்றேன். ரோந்து பணிக்கு செல்லும் போது உபகரணங்கள் எடுத்து சென்றேனா என்றால் மடிக்கணினி எடுத்து சென்றேன். ரோந்து பணிக்கு செல்வது குறித்து பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி மதுபான பாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்றால் கட்டைப் பையில் வைத்திருந்தார். எதிரியிடமிருந்து கட்டைப்பை கைப்பற்றப்பட்டதா என்றால் கைப்பற்றப்பட்டது. அந்த கட்டைப்பை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான

பாட்டில்களில் அரசு முத்திரை இருந்ததா என்றால் இருந்தது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்களை எங்கு வைத்து அழித்தோம் என்றால் சம்பவ இடத்தில் வைத்து அழித்தோம். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து மதுபான பாட்டில்கள் எதுவும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.22 12:03:16 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 83 of 2026**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திருமதி. தமிழரசி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**<u>(Accused Present)</u>**

**Dated.22.07.2026**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 1400 ஆசியா என்பவருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராஜா என்கிற மீசை ராஜா த/பெ. ஆறுமுகம், பெரியார் நகர், மேலவாளாடி, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 07.20 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை காலை 07.40 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார்

செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், 1400 ஆசியா என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.00 மணியளவில் 55 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். பின்பு எதிரியுடன் காலை 08.45 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 5/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த அழித்தல் மகஜரில் நானும், 1400 ஆசியா என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.5/அ.சா.2** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.6/அ.சா.2** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

எதிரியிடமிருந்து மதுபான பாட்டில்கள் எதுவும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.22 12:03:23 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி